சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

# சப்ரகமுவ மாகாண அரச சேவையில் நன்னடத்தை , சிறுவர் பராமரிப்பு மற்றும் சமூக சேவை திணைக்களத்தில் நன்னடத்தை அலுவலர் தரம் II பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப்பரீட்சை – 2021

1.0 2015.01.19 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்த சப்ரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்ட சப்ரகமுவ மாகாண நன்னடத்தை , சிறுவர் பராமரிப்பு மற்றும் சமூக சேவை திணைக்களத்தின் கள / அலுவலக –பிரிவு 2 சேவைத் தரத்தில் (நன்னடத்தை அலுவலர் பதவி) இற்கான ஆட்சேர்ப்பு விதி முறைகளுக்கு அமைய நன்னடத்தை அலுவலர் II ஆம் தரத்தின் பதவிக்கு ஆட் சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 இப் பரீட்சை சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சைகள் இடம் பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய 15/90 ஏற்பாட்டிற்கு அமைய மாவட்ட மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இரண்டு மாவட்டங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களின் தகுதிக்கு ஏற்ப தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் , சப்ரகமுவ மாகாண அரச சேவையின் நன்னடத்தை அலுவலர் தரம் II பதவிக்கு தெரிவு செய்யப்படுவர்.

3.0 இப் போட்டிப்பரீட்சையின் ஊடாக தற்போது 5 வெற்றிடங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்படும். எதிர்வரும் காலங்களில் ஏற்படும் வெற்றிடங்களையும் இப் போட்டிப் பரீட்சையில் பூர்த்தி செய்வதுடன் , இப்பதவி நடைமுறைக்கு வரும் திகதி நியமன அதிகாரிகளினால் உறுதி செய்யப்படும்.இவ்விணைத்துக் கொள்வதற்கான அறிவித்தலுக்கு அமைய வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பான இறுதித் தீர்மானத்தினை சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவே எடுக்கும்.

4.0 சம்பளம் : இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய நன்னடத்தை அலுவலர் II தரத்திற்கான சம்பள வகுதி MN 5 -2016 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.34,605-10x660-11x755-15x930-ரூ.63,460/- ஆகும்.

5.0 தகைமைகள் : சப்ரகமுவ மாகாண அரச நன்னடத்தை அலுவலர் தரம் II இற்கான பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) கல்வித் தகைமை :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாட கல்விமானி பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) ஏனைய தகைமைகள் :

சகல விண்ணப்பதாரிகளும் சப்ரகமுவ மாகாணத்தினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உளத் தகமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள் :

I. விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.
II. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. 2021.01.31 ஆம் திகதி விண்ணப்பதாரி சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் , விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்திர வதிவிடமில்லை எனில் , விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.
IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : சகல விண்ணப்பதாரிகளும் உரிய சகல தகமைகளையும் 2021.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

6.0 பரீட்சை நடைமுறைகள் :

இந்த எழுத்துப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரமே நடைபெறும். பரீட்சாத்திகள் அவர்களின் விருப்பத்திற்கேற்ப இவற்றில் ஒரு மொழி மூலத்தினை தெரிவு செய்து இந்த பரீட்சைக்கு தோற்றலாம். கோரப்படும் மொழிமூலத்தினை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.இப் பரீட்சை 02 வினாத் தாள்களைக் கொண்டது.

| | பாடங்கள் | புள்ளி | நேரம் |
|---|---|---|---|
| 1. | பொது விவேகப் பரீட்சை | 100 புள்ளிகள் | 01 மணித்தியாலயம் |
| 2. | பொது அறிவு | 100 புள்ளிகள் | 01 மணித்தியாலயம் |

மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கான விடயப் பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வினாத்தாளின் பெயர் | விடயப் பரப்பு |
|---|---|
| பொது விவேகப் பரீட்சை | பரீட்சாத்தியின் மொழித் திறமை , கணிதத் திறமைகள் , தர்க்க சாஸ்திரம் ஆற்றலினை தீர்மானிக்க தயாரிக்கப்பட்டுள்ள பல்தேர்வு மற்றும் குறுகிய வினாக்களுடையது |
| பொது அறிவு | தேசிய மற்றும் சர்வதேச ,சமூக பொருளாதார , அரசியல் தகவல்களை உள்ளடக்கிய பல்தேர்வு மற்றும் குறுகிய வினாக்களுடையது |

நியமனத்திற்கான தகமையினைப் பெற்றுக் கொள்ள ஆகக் குறைந்த புள்ளிகளாக நூற்றுக்கு நாற்பது (40%) பரீட்சாத்தியொருவர் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் , வெற்றிடங்களின் அளவிற்கேற்ப பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

குறிப்பு : பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையினை விட குறைவான இருந்தால், எழுத்துப் பரீட்சையினை நடத்தாமல் நேர்முகத் தேர்வின் மூலம் தகைமைகளை சோதனை செய்த பின் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

7.0 பரீட்சைக் கட்டணங்கள் :

பரீட்சைக் கட்டணம் ரூ.1000/- ஆகும். சப்ரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். <u>இப் பரீட்சைக் கட்டணத்தை சப்ரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்க வேண்டும்.</u> செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.

8.0 விண்ணப்பப்படிவம் :

A-4 அளவிலான கடதாசிகளை உபயோகித்து,

(அ). தொடரிலக்கம் 01 முதல் 04 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ). இல 05 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலத்தினைக் கொண்டு தமது கையெழுத்தினாலே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(இ).விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் , தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சை கட்டணங்களைச் செலுத்திடாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாக அமையும்.பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும்.அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

8.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் , விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாகவோ

கருதப்படமாட்டாது.விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

8.2 விண்ணப்பதாரியின் கையொப்பம் , அரசாங்க பாடசாலையின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / பிரசித்த நொதாரிசு / முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் / பொலிஸ் சேவை அலுவலர் வருடாந்தம் ரூ. 240,360/- ரூபா அல்லது அதற்கு விஞ்சிய திரட்டிய வேதனத்தினைப் பெறுகின்ற அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2021.01.31 திகதி அல்லது அதற்கு முன்னர் " செயலாளர் , மாகாண அரச சேவை ஆணைக்குழு, சபரகமுவ மாகாண சபை , சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, புதிய நகரம் , இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

8.4 விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சபரகமுவ மாகாண நன்னடத்தை அலுவலர் II ஆம் தரத்தின் பதவிக்கு ஆட் சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2021" மற்றும் நிரந்தர பதிவு மாவட்டத்தினையும் குறிப்பிட வேண்டும்.

9.0 விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை

II) செல்லுபடியாகின்ற கடவுச் சீட்டு

10.0 தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பிழையானது அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபடிக்கப்பட்டால் , அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும்.ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையான அல்லது தவறான தகவல் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.0 இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருத்து இருந்தால் , அது தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.சகல விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்ட திட்டங்களுக்கு அமைய இணைக்கப்பட்டுள்ளீர்கள்.

2020.12.17 திகதி

சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி,
புதிய நகரம் , இரத்தினபுரி.

பீ.எஸ்.ஆர்.எம்.விஜயராஜ,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சபரகமுவ மாகாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சபரகமுவ மாகாண அரச சேவையில் நன்னடத்தை அலுவலர் தரம் II பதவிக்கான ஆட்சேர்ப்பு

செய்வதற்கான திறந்தப் போட்டிப்பரீட்சை – 2021

**Open Competitive Examination for the Recruitment to the post of Probation Officer – Grade II in the Sabaragamuwa Provincial Public Service - 2021**

---

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : [ ]

சிங்களம் – 2 தமிழ் – 3

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

[ ]

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரம் : இரத்தினபுரி - 01 [ ] (உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்

கேகாலை - 02

1.0 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ+ம் PERERA A.B.C

..........................................................................................................

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ..........................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் [ | | | | | | | | | ]

1.5 தொலைபேசி இலக்கம் [ | | | | | | | | | ]

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) ..........................................

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................

3.2 பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................

3.3 வதியும் கால எல்லை : ..........................................

3.4 கிராம செயலாளர் பிரிவு : ..........................................

4.0 4.1 பால் பெண் 1 [ ] உரிய இலக்கத்தினை எழுதுக

ஆண் 0

4.2 பிறந்த திகதி :

வருடங்கள் [ | | | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4.3 2021.01.31 ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5.0 கல்வித் தகைமை

I. பெற்றுக் கொண்ட பட்டம் மற்றும் பாடங்கள் : ..............................................................

II. அச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி ..............................................................

III. பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ....................................

..............................................................................................................................

(பட்டச் சான்றிதழின் பிரதியினை இணைக்க வேண்டும்)

6.0 நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் √ அடையாளமிடவும் )

ஆம் ☐ இல்லை ☐

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள்

I. பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ..........................................

II. பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதயும் : ..................................................

III. செலுத்திய பணம் : ..............................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.<br>( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் ) |

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன்.இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யாதிருந்தால் மற்றும் / அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக பூர்த்தி செய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகின்றேன்.மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகமை நீக்கத்திற்கும் , நியமனத்திற்கு பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

(ஈ) மேலும் இப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

................................ ...............................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

9.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ ..................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................... ஆந் திகதி வைத்தார் என்றும் , உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிபடுத்துகின்றேன்.

................................ ......................................

திகதி

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர்
கையொப்பம்

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் பெயர் : ............................................................

பதவி : ...........................................

முகவரி : ..........................................

(பதவி முத்திரை மூலம் உறுதிபடுத்தப்பட வேண்டும்)

10.0 அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உறுதிபடுத்தலையும் நிறுவனத் தலைவர் , திணைக்கள தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) இந்த திணைக்களத்தில் ...................... திகதி தொடக்கம் .......................... பதவியில் சேவைபுரியும் திரு./திருமதி./செல்வி./ ............................................ விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு கிடைக்க வேண்டிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் உழைத்துள்ளார் என்றும் , எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும், விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியான மற்றும் உண்மையானவை என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்படுவாராயின் , விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

பெயர் ............................................

பதவிப் பெயர் ................................

திகதி ...............................................

( திணைக்களம் /நிறுவனம் )

............................................................

திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தர் கையொப்பம்